## இ-சேவை மையங்களை 35 ஆயிரமாக அதிகரிக்க திட்டம்!

# அரசின் செயல்பாடுகளை டிஜிட்டல் மயமாக்குவதே இலக்கு!

## பேரவையில் தகவல் தொழில்நுட்பத்துறை மானியக் கோரிக்கையில் 14 அறிவிப்புகளை வெளியிட்டு அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பதிலுரை!

சென்னை,ஜூலை 3

**பேரவையில் தகவல் தொழில்நுட்பத்துறை மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பதிலுரையில் அரசின் செயல்பாடுகள் அனைத்தையும் டிஜிட்டல் மயமாக்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்த அரசு செயல்படுகிறது என்று குறிப்பிட்டார்.**

பேரவையில் தகவல் தொழில்நுட்பத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அளித்த பதிலுரை வருமாறு:-

எனக்கு இந்த வாய்ப்பளித்த முதலமைச்சர் அவர்களுக்கும், உங்களுக்கும் முதலில் என் நன்றியைத் தெரிவித்து, சக அமைச்சர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்து, என்னுடைய பதிலுரையை துவங்குகிறேன். 2024-2025 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெறும் இறுதி நாளான இன்று, பதிலுரையை அளிக்க விரும்புகிறேன்.

நான் மொத்தமாகவே மூன்றே மூன்று தலைப்புகளில் பேச விரும்புகிறேன். முதலாவதாக, வெட்டுத் தீர்மானங்களில் உள்ள கருத்துகளுக்குப் பதிலளிக்கும் வகையிலும், இன்றையதினம் உரையாற்றிய உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கின்ற வகையிலும் உரையாற்ற விரும்புகிறேன். இரண்டாவதாக, இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் அ.தி.மு.க. உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் இங்கே இல்லையென்றாலும், தவறான தகவல்களை வைத்து, பொதுவெளியில் அரசு கேபிள் டிவி பற்றிய சில வதந்திகளைப் பரப்பியதற்கு இந்த சட்டமன்றத்தில் பதிலளிக்க விரும்புகிறேன். மூன்றாவதாக அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்.

இன்று உரையாற்றிய பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன், உறுப்பினர் தி. ராமச்சந்திரன், உறுப்பினர் எம்.ஆர். காந்தி, உறுப்பினர் தே. மதியழகன், உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, உறுப்பினர் டாக்டர் ஏ.ஆர். ஆர்.ரகுராமன் மற்றும் சி.பி.ஐ. தலைவர் உறுப்பினர் ட்டி. இராமச்சந்திரன் ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் கூறிய கருத்துகளில் பல கருத்துகள் ஏற்கெனவே வெட்டுத் தீர்மானங்களில் இருக்கின்றன. வெட்டுத் தீர்மானங்களில் கொடுக்கப்பட்டுள்ளவற்றிற்கு 5, 6 தலைப்புகளில் மிக வேகமாக பதிலளித்துவிடுகிறேன்.

இ-சேவை மையங்களை இன்னும் பரவலாக்க வேண்டும் என்றும், அதன் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும் என்றும், அனைத்துக் கிராமங்களிலும் இ-சேவை மையங்களை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் உறுப்பினர் பி.அய்யப்பன், உறுப்பினர் எஸ்.எஸ்.. பாலாஜி, உறுப்பினர் ஜி.கே. மணி மற்றும் உறுப்பினர் எஸ். சதாசிவம் உள்ளிட்ட உறுப்பினர்களெல்லாம் கோரியிருந்தார்கள். ஏற்கெனவே சில ஆயிரமாக இருந்த இ-சேவை மையங்கள்,—20,000க்கும் மேற்பட்ட இ-சேவைகள் அமைக்க உத்தரவிட்டு, அவற்றின் எண்ணிக்கையை படிப்படியாக 35,000 ஆக அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எந்தவொரு கிராமப்புறங்களிலும் 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள் இ-சேவை மையத்தை access செய்வதற்கு, அதாவது, நகர்ப்புறங்களில் 1 கி.மீ. தூரத்திற்குள்ளும், கிராமப்புறங்களில் 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளும் இ-சேவை மையம் இருக்க வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில், யாரெல்லாம் விண்ணப்பிக்கிறார்களோ, அவர்களின் தகுதிகளைக் கண்டறிந்து, கடன் உதவி உள்ளிட்டவற்றிற்கு ஏற்பாடு செய்து, இ-சேவை மையங்களைத் துவக்குவதற்கு முழு முயற்சிகளை எடுத்து வருகிறோம். அதனால், அனைத்து இடங்களிலும் சிறப்பான இ-சேவை மையங்கள் அமைக்கப்படும். புதிதாகக் கட்டடம் கட்டி, புதிதாக பணியாளர்களை தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக, ration card வழங்குதல், Driving Licence வழங்குதல், சான்றிதழ்கள் வழங்குதல் உள்ளிட்ட அனைத்து சேவைகளையும் இ-சேவை மையம் மூலமாக மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய இலக்காகும்.

இரண்டாவது, உறுப்பினர் ஜி.கே. மணி உட்பட பலர், BSNL மற்றும் பிற செல்போன் நிறுவனங்கள் இன்னும் சிறப்பாக 4G service மற்றும் கிராமப்புறங்களில் cell phone service கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தத் துறை மாநில அரசின் கட்டுப்பாட்டில் இல்லையென்ற சூழ்நிலையிருந்தாலும், ELCOT மூலம் இந்த tower உரிமை விண்ணப்பிக்கும் nodal agency ஆக நாங்கள் இருப்பதால், முடிந்த அளவுக்கு அந்த அழுத்தத்தை நாங்கள் கொடுத்து வருகிறோம். உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொரு company-யும் அவர்களுக்கென்று தனித்தனியாக tower இயக்குவதில்லை. அந்த tower-யெல்லாம் securitize செய்து, பொதுவாக்கி, சில Indus Towers மாதிரி சில companyகள்தான் அந்த tower-ஐ வைக்கிறார்கள். பல Cell phone company. ஒரே tower-ல் அவர்களுடைய signal-ஐ beam செய்கிறார்கள். அந்த கம்பெனிகள் பல கோரிக்கைகள் வைத்து, ஏற்கெனவே இந்த ஓராண்டில் அவர்களுடைய deemed licence-யும் approval-ஐயும் அவர்கள் கேட்டதுபோன்று சிறப்பித்து, அவர்களுடைய பணியை வேகப்படுத்தியிருக்கிறோம். ஆகையால், அந்த உறவை வைத்து, எல்லா இடங்களிலும் இந்த 4G data service சேர்ப்பதற்கு முயற்சி எடுக்கிறோம்.

### வேலைவாய்ப்பில் ஐ.டி. துறை முதலிடம்

மூன்றாவது, IT Park மற்றும் TIDEL Park. ஏற்கெனவே தொழில் துறை அமைச்சர் அவர்கள் TIDEL Park பற்றி பேசியிருக்கிறார். எனவே, அதற்கு மேல் நான் பேச விரும்பவில்லை. IT Park-ஐப் பொறுத்தவரை, இருக்கிற IT Park-களில் முடிந்தளவிற்கு வேகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். உதாரணத்திற்கு சேலம் சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள், இங்கே இல்லையே தவிர, ஜாகிர் அம்மாபாளையத்தில் இருக்கிற பூங்காவில் கூடுதல் நிறுவனங்கள் கொண்டு வர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். கொள்கை விளக்க குறிப்பிலேயே இதுகுறித்த தகவல்கள் இருக்கின்றன. எல்லா IT Park-லும் சென்ற ஓராண்டு, இரண்டாண்டுகளில் இதுவரைக்கும் செல்லாத வேகத்தில் lease, அந்தக் குத்தகையும், கட்டடமும் சென்றுக்கொண்டிருக்கிறது. புது IT Park உருவாக்குவதற்கு நிதி நிலைமைக் கேற்பதான் செய்ய முடியும். எல்லா இடங்களிலும் வேலைவாய்ப்பை உருவாக்குவதில் IT துறைதான் முதலிடம். ஏனென்றால், சராசரி 100 சதுரடிக்கு ஒரு IT வேலைவாய்ப்பை உருவாக்க முடியும். கட்டுமானப் பணி மட்டுமே, அது இல்லாமல் IT connectivity-broadband connectivity மட்டுமே தேவை. எனவே, நான் இங்கே கூறியிருக்கிறேன். மாதத்திற்கு minimum 10,000 வேலை வாய்ப்புகள், தொடர்ந்து புது நிறுவனங்கள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. இதனை வேகப்படுத்தும் வகையில் சில அறிவிப்புகளை நாங்கள் கூறயிருக்கிறோம். அதனால், உறுப்பினர்கள் எம். ஆர். காந்தி, ச. சிவகுமார், இரா. அருள், ட்டி. இராமச்சந்திரன், எஸ். சதாசிவம், எஸ். பழனி நாடார் மற்றும் மா. சின்னதுரை ஆகியோர் கேட்ட கோரிக்கையை நிதிநிலை ஆதாரங்கள் சரியாக இருக்கும் சூழ்நிலையில், தேவைக்கேற்ப IT பூங்காக்கள் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், Skill Development. Artificial Intelligence, Robotics போன்ற துறைகளில் இன்னும் கூடுதல் பாடங்கள், கூடுதல் course நடத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவிலேயே No.1 Training Academy-ஆக ICT Academy of Tamil Nadu என்ற நிறுவனம், அவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டு, ஆண்டுக்கு பல இலட்சம் மாணவர்களுக்கு பாடம் கற்பிக்கும் வகையிலும், 10 மாநிலங்களில் அதனுடைய அலுவலகம் வைக்கும் அளவிற்கும் 1,800 கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுடன் உறவு வைத்திருக்கும் வகையிலும் இந்த Skill Development நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். எனவே, நீங்கள் கூறுகிற அந்த subjects-ஐ உறுதியாக அதில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு ஆண்டுக்கு 7, 8 மாநாடுகள், Conferences நடத்துகிறோம். அதற்கு பெயர் CONNECT and BRIDGE. CONNECT-ஐ CII செய்கிறார்கள்; நாங்கள் உதவி செய்கிறோம். BRIDGE என்பது ICT Academy-னுடைய original conference. BRIDGE என்றால் வேலைவாய்ப்பை தேடும் இளைஞர்கள் படிக்கும் கல்லூரிகளிலும், வேலைவாய்ப்பை அளிக்கும் நிறுவனங்களும் campus recruitment செய்கிற நிறுவனங்களும், இவர்களுக்கு தேவையான அளவுக்கு அவர்களுடைய courses, subjects-களை, அவர்களுடைய degreeகளை adopt செய்ய வேண்டுமென்பது, அந்த BRIDGE. இந்த இரண்டு பேர்களையும் இணைப்பது. இந்த BRIDGE கூட்டங்கள் ஆண்டுதோறும் Guwahati, Delhi, Bangalore, Pune, Hyderabad, Chennai, Madurai, Coimbatore என்று இது போன்று நாடு முழுவதும் பல இடங்களில் நடந்து, ஒவ்வொன்றிலும் பல நூறு கல்லூரிகள் பங்கேற்கி றார்கள்.



நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்கு பிறகு, ICT Academy-னுடைய சிறப்பான பணியை, 60 சதவிகிதமாவது தமிழ்நாட்டிலே செய்ய வேண்டுமென்ற ஒரு புது இலக்கை வைத்து, ஏனென்றால் நிறைய வெளி மாநிலங்கள் செய்திருந்தார்கள். இலாபகரமாக நடத்துகின்ற ஒரு conference கூட, அதனால் அந்த focus-ஐ இங்கு கொண்டு வந்துவிட்டோம். அதனைச் சிறப்பாக செய்வோம் என்று கூறுகிறேன். மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ச. சிவகுமார் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் அருள் அவர்களும், புதிய IT கல்லூரி திறக்க வேண்டும். இல்லையென்றால், Drone Technology-யை அவர்களுடைய தொகுதியிலுள்ள கல்லூரிகளில், உதாரணத்திற்கு Salem Engineering Collegeல் subject - ஆக கொண்டு வரவேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்துள்ளார்கள். இவையெல்லாம் உயர்கல்வித் துறையினுடைய கட்டுப்பாட்டில் உள்ள கோரிக்கைகள். எனவே, இந்த கோரிக்கையானது அந்த துறைக்கு அனுப்பப்பட்டு, அவர்கள் அதை சரியான வகையில் அதை ஆய்வு செய்வார்கள் என்று கூறுகிறேன். சட்டமன்ற உறுப்பினர் அருள் அவர்கள், தமிழ் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் இணையதளம் வழியாக இன்னும் வெளிகொண்டு வரவேண்டும். பலரும் பெற்றுக்கொள்ளும் வகையில், access செய்யும் வகையில் செய்ய வேண்டுமென்று கூறி யிருக்கிறார். அது Tamil Virtual Academy என்ற IT துறையில் செயல்படும் நிறுவனத்தினுடைய முக்கிய இலக்குகளில் ஒன்றாக இருக்கிறது. அதற்கும் கூடுதல் நிதியையும், சில அறிவிப்பினையும் இன்றைக்கு கூற இருக்கிறேன்.

### இ-சேவை மையங்களில் ஆன்லைன் பேமெண்ட்

உறுப்பினர் இராமச்சந்திரன் அவர்கள், அனைத்து அரசு அலுவலகங்களிலும் பண பரிமாற்றம் இல்லாமல், அனைத்து payment-களும் onlineல்தான் செய்ய வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். கிட்டதட்ட இன்றைக்கு அந்த சூழ்நிலையில்தான் இருக்கின்றது. EB உட்பட, அனைத்து இடங்களிலும் RTGS, phone payment மட்டும்தான் செயல்படுத்தப்படுகிறது. கிட்டதட்ட பண பரிமாற்றம் இல்லை. இன்னும் எங்காவது இருந்தால், அதனையும் கண்டறிந்து onlineல் செய்வதற்கு வழிவகுப்போம். இ-சேவை மையங்களிலும் online payment செய்வதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்துள்ளோம். எனவே, அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. இறுதியாக மயிலம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள் weather prediction, அதாவது எப்போது மழை வருகிறது; எப்போது storm வருகிறது; எப்போது புயல் வருகிறது என்பதை அறிவதற்கான தொழில்நுட்ப கருவிகளை அதிகரிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். அதுவும் எங்களுடைய துறையின்கீழ் செயல்படாத ஒரு தலைப்பு. எனவே, Disaster Management துறைக்கு அதனை அனுப்பி, அங்கே சரியான நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று கூறுகிறேன்.

இறுதியாக உறுப்பினர் எஸ்.பி. பாலாஜி அவர்கள், Aadhaar Validation Centre-ல் ஒரு சில குளறுபடிகள் கூறி, ஒரு நாளைக்கு இருபது நபர்களுக்கு மட்டும்தான் இந்த உதவி வழங்கப்படுகிறது என்று தெரிவித்திருக்கிறார். ஆண்டிற்கு பல இலட்சம் பேர்கள் தமிழ்நாடு முழுவதும் இந்த சேவையினை use செய்கிறார்கள். ஆனாலும், இந்த centre-ல் என்ன பிரச்சினை இருக்கிறது என்பதனை தெரிந்து, அதனை திருத்தும் வகையில் நான் பார்த்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், வெளியிலே ஒரு அறிக்கையும், உள்ளே ஒரு கவன ஈர்ப்பு தீர்மானமும் கொடுத்து, Arasu Cable TV நிறுவனத்தினுடைய செயல்பாடு மிகவும் குறைந்து விட்டது. அதனை தவறாக நடத்துகிறீர்கள் என்று கூறியிருந்தார். அதற்கு கவனம் ஈர்த்தார். ஆள், ஆளுக்கு வெவ்வேறு வரலாறு, வெவ்வேறு அனுபவம், வேறு வேறு கல்வி இருக்கலாம். என்னைப் பொறுத்தவரைக்கும், நான் Management மேலாண்மையை உலகத்தில் தலைசிறந்த பல்கலைக்கழகங்கள் ஒன்றில் படித்தவன். உலகத்தில் பெரிய, பெரிய நிறுவனங்களில் MD-ஆக வேலை செய்தவன். ஓரளவிற்கு நிறுவனம் எப்படி நடத்த வேண்டும். எது நல்லது, எது தவறு என்ற அனுபவமும், தெளிவும் பெற்றவன் என்ற அடிப்படையில் சொல்வேன். இந்த TACTV-யை போல ஒரு மோசமான ஒரு நிறுவனத்தை வாழ்க்கையில் நான் பார்த்ததே இல்லை.

## அ.தி.மு.க. ஆட்சியில் மோசமாக செயல்பட்ட அரசு கேபிள் டிவி நிறுவனம்!

இது தனிநபர் நிறுவனமாக இருந்தால், இந்நேரம் திவாலாகி இருக்கும். நாங்கள் ஆட்சிக்கு வரும்போது, 575 கோடி ரூபாய் இன்னும் TV Companies-க்கு கட்ட வேண்டிய சூழ்நிலையும், 270 கோடி ரூபாய் analog-ல் இருந்து digital-க்கு மாறுவதற்கு முன்னால் cable operators-டமிருந்து பெற வேண்டிய நிதியாகவும், யாரிடமிருந்து எவ்வளவு என்ற ஒரு audited statement கூட இல்லாமல், கிட்டதட்ட 170 கோடி ரூபாய் negative equityல் இருந்த நிறுவனமாக கொடுத்தார்கள். அதுகூட பரவாயில்லை. மனிதரின் உடல்நிலையை சொல்வோம், நல்லா இருக்கிறார்கள்; மருத்துவமனையில் இருக்கிறார்கள்; இல்ல ICU-ல் இருக்கிறார்கள் என்று சொல்வோம்.

இந்த TAC TV நிறுவனத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், ICU-ல் இருக்கிறார்கள். ஆனால், ICU-ல் ஆக்ஸிஜன் கிடையாது. ICU-க்கு current வருவதற்குக்கூட யாரோ ஒரு மூன்றாவது நபரிடம், ஒரு ஒப்பந்தக்காரரின் கையில் கொடுத்துவிட்டு, அந்த நபருடைய control ஒரு China system-ல் இருக்கிறது. இந்தளவுள்ள ஒரு நிறுவனத்தை எங்களுடைய கையில் கொடுத்துவிட்டு, திவாலான கம்பெனியை எங்களிடம் கொடுத்துவிட்டு, அதை நாங்கள் படிப்படியாக சீர்திருத்திக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், ஏதோ நாங்கள் சரியாக நடத்தவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை வைப்பதும், அறிக்கை வெளியிடுவதும் மிகவும் கபட நாடகமாகத்தான் நான் கருதுகிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வந்த இந்த மூன்றாண்டுகளில், இன்றைக்கு அந்த dues-ஐ 575 கோடி ரூபாயிலிருந்து 471 கோடி ரூபாயாக குறைத்திருக்கிறோம். நிதித் துறையின் அமைச்சராக நான் இருந்தபோது, Government guarantee-யோடு 150 கோடி ரூபாய் Bankலிருந்து loan வாங்கி, இன்றுவரைக்கும் அந்த நிறுவனத்தைத் தக்க வைத்திருக்கிறோம் என்பது உண்மை. Subscribers குறைந்திருக்கிறார்கள். ஏனென்றால், இந்த control system நம்முடைய கையில் இல்லை. யாரோ ஒருவருடைய கையில் இருக்கிறது. கிட்டத்தட்ட ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு தடவை blackmail மாதிரி ஒரு சூழ்நிலை நடைபெறுகிறது. இதையெல்லாம் திருத்துவதற்காக அடிப்படையிலிருந்து திட்டம் போட்டு, அந்தக் control ஆரம்பித்து, Client Management-ல் ஆரம்பித்து, Inventory Management-ல் ஆரம்பித்து அடிப்படையான திட்டத்தையெல்லாம் உருவாக்கியிருக்கிறோம். நான், ஏற்கெனவே இங்கு பதிலளித்ததுபோல், We are now going to go for HD set top boxes பற்றி Eventual - ஆக எப்படி செல்லப் போகிறோம் என்று அறிவிப்பில் கூறவிருக்கிறேன். இந்தமாதிரி ஒரு தவறான நிறுவனத்தை, இதில் அரசியல் செய்ய நான் விரும்பவில்லை. ஆனால், நானும் நிதித் துறையில் அமைச்சராக இருந்தவன் என்ற முறையில் நான் கூறுவேன். அதில், BPEBureau of Public Enterprises என்ற Oversight நிறுவனம் இருக்கிறது. அதனால் நான் எத்தனையோ 100 அரசு நிறுவனங்களுடைய சூழ்நிலையைப் பார்த்திருக்கிறேன். நிர்வாக அடிப்படையில் இவ்வளவு குளறுபடியுடன் ஆரம்பித்து, செயல்படுத்திய ஒரு நிர்வாகத்தை நான் பார்த்ததே இல்லை. வெளியிலும் இல்லை, அரசாங்கத்திலும் இல்லை. அதனால் இதை வைத்து அவர்கள் நம்மிடத்தில் அரசியல் செய்வது என்பது மிகவும் கபட நாடகமாகத்தான் நான் கருதுகிறேன்.

இறுதியாக, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை மானியக் கோரிக்கை மீதான கொள்கை விளக்கக் குறிப்பின் அறிக்கையையும், எல்லா வகையிலும் இந்த அறிவிப்புகளுக்குட்பட்டு, எல்லா பணிகளுக்கும் நிறுவனத்தில் இருக்கிற எல்லா HODs-ஐயும் இயக்கி, துறைக்கு அரசு கூடுதல் தலைமைச் செயலாளராக இருக்கும் தீரஜ்குமார், அனைத்து துறை நிர்வாகிகளுக்கும் என் நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்திற்கும் நான் ஓரளவுக்கு பதிலளித்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். அதை என்ன செய்யப் போகிறோம், எதற்காக இந்தச் சூழ்நிலையில் இருக்கிறது என்று கூறிய தன் அடிப்படையில், உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை குறித்த சில அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

### அறிவிப்புகள்

1. TNeGA-ல் எத்தனையோ programmeகளுக்கு, அதாவது கலைஞர் மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்டு, Family database உள்ளிட்ட எல்லா பணிகளும் அதில் நடைபெறும்போது, ஒரே நிறுவனம் செயலிலும், கண்காணிப்பிலும், தணிக்கையிலும் இருக்கிறது சரியில்லை என்ற அடிப்படையில், பல இடங்களில், பணி செய்த இடங்களில் நான் கண்டறிந்திருக்கிறேன். நிதித் துறையிலும் அதேமாதிரி தணிக்கையையும், செயலையும் பிரித்தோம். அதேபோல் இந்த இடத்தில் அந்த Standard setting, Oversight, Compliance இவற்றையெல்லாம் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து பிரித்து, தனியாக இயக்கப் போகிறோம்.

அரசின் செயல்பாடுகளை டிஜிட்டல் மயமாக்குவதை இந்த அரசு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு முதல் பொதுமக்கள், வணிகம் மற்றும் அரசுத் துறைகளுக்கிடையேயான சேவைகளை டிஜிட்டல்மயமாக்குவதில் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தரவுகளின் அடிப்படையில் முக்கியத் திட்டங்களை முடிவுசெய்து, அதனைச் செயல்படுத்துவதில் இந்த அரசு முன்னோடியாக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் போன்ற திட்டங்களுக்கு தமிழ்நாடு மின்னாளுமை முகமை தொழில்நுட்பம் சார்ந்த உதவிகளைச் செய்து வருகிறது.

மின் ஆளுமை மற்றும் தரவு அடிப்படையிலான அணுகுமுறைகளைச் சார்ந்திருப்பது அதிகரித்துவரும் இவ்வேளையில், செயலிகள் உருவாக்கம், தரவுப் பதிவேற்றம், தரவுப் பகிர்வு மற்றும் இணையப் பாதுகாப்பு ஆகியவற்றில் தரநிலைகளை (standards) உருவாக்கி நடைமுறைப்படுத்தும் தமிழ்நாடு மின்னாளுமை முகமை மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஆகியவற்றின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்த, தனித்தியங்கும் ஒழுங்குமுறை அமைப்பு ஒன்றை உருவாக்குவது அவசியமாகிறது.

எனவே, ஆளுகையினை காகிதமில்லா டிஜிட்டல் முறைக்கு மாற்றம் செய்வதை உறுதி செய்யும் நோக்கத்திற்காக, மின் ஆளுமை இயக்குநரகத்தில் தனியாக தர நிர்ணய மற்றும் அமலாக்கப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

2. ஏற்கெனவே நான் கூறியதைப் போல, TAC TV ஓர் உதாரணமாக இருந்தாலும், 8 நிறுவனங்கள் அதாவது, registered societies - ஆகவோ அல்லது registered section 8 companies-ஆகவோ இருக்குமிடத்தில், compliance அதாவது audit சரியான நேரத்தில் வர வேண்டும், Balance sheet சரியான நேரத்தில் வர வேண்டும். இவற்றையெல்லாம் செய்வதற்காக, அவர்களுடைய செயல்பாடுகளையெல்லாம் மேம்படுத்தும் நோக்கில், 8 நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்யப்படும்.

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையானது கொள்கை மற்றும் உள்கட்டமைப்புகளை உருவாக்குவதன்மூலம் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல், அரசுத் துறைகளை டிஜிட்டல்மயமாக மாற்றுதல், இ-சேவைகளை வழங்குதல், பொதுமக்களுக்கு கேபிள் டிவி சேவைகளையும் இணைய இணைப்புகளையும் வழங்குதல், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களை வேலை வாய்ப்பிற்கு ஆயத்தப்படுத்தும் வகையில் அவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பத்திறன் பயிற்சி அளித்தல், ஆழ்தொழில்நுட்பம் மற்றும் வளர் தொழில்நுட்பங்களில் புத்தொழில் முனைவோரை ஊக்குவிப்பதுடன், தொழில்நுட்பத்தின்மூலம் தாய்மொழியாம் தமிழை உலகெங்கும் பரப்புதல் ஆகிய பன்முகப் பணிகளைச் செய்து வருகிறது.

மேற்கண்ட பணிகள் அனைத்தும், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT), தமிழ்நாடு மின்ஆளுமை முகமை (TNeGA), தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET), தமிழ்நாடு கேபிள் டிவி நிறுவனம் (TAC TV), தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICT Academy), தமிழ் இணையக் கல்விக் கழகம் (TVA) மற்றும் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT) ஆகியவற்றின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 40 ஆண்டுகளில் தோற்றுவிக்கப்பட்டுள்ள இந்நிறுவனங்களின் செயல்பாடுகளும், பங்களிப்புகளும், ஒரே மாதிரியான பணிகளை ஒன்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மேற்கொள்வதுபோல அமைந்துள்ளன.

எனவே, மேற்கண்ட நிறுவனங்களின் திறன் மற்றும் செயல்பாடுகளை உறுதிப்படுத்தி மேம்பட்ட சேவைகளை அளிக்கும் நோக்கில், இந்நிறுவனங்கள் தனித்த பண்புகளுடன் மறுசீரமைப்பு செய்யப்படும். மேற்குறிப்பிட்ட நிறுவனங்களின் வெளிப்படைத்தன்மை, பொறுப்புத்தன்மையினை உறுதிப்படுத்த அவை, நிறுவனங்கள் சட்டம், பிரிவு 8-ன்கீழ் கொண்டுவரப்படும்.

3. பெருங்குடியில் ஏற்கெனவே பெரிய demand இருக்கிற சூழ்நிலையில், அந்த நிலத்திற்கு வெளிப்படைத்தன்மையுடன்

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்